## கண்டமங்கலத்தை தனி வருவாய் வட்டமாக அறிவித்திடுவீர்! சவுக்கு விளைச்சல் அதிகமுள்ள

# வானூரில் டி.என்.பி.எல். ஆலை அமைத்திட வேண்டும்!

## சட்டப் பேரவையில் – கழக உறுப்பினர் கௌதம் திராவிடமணி கோரிக்கை!

**சென்னை,ஆக.27-**

**சட்டப் பேரவையில், பொதுப் பணித்துறை மானிக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய வானூர் தொகுதி கழக உறுப்பினர் கௌதம் திராவிடமணி, "கண்டமங்கலம், தனி வருவாய் வட்டமாக அறிவிக்கப்பட வேண்டும்," எனவும், "சவுக்கு விளைச்சல் அதிகமுள்ள வானூரில் டி.என்.பி.எல். ஆலை அமைத்திட வேண்டும்!" எனவும் வேண்டுகோள் விடுத்தார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது பற்று கொண்ட எனது பாட்டனார் கே.எஸ். சுப்புராயன் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப்பணி ஆற்றினார். 1972 ஆம் ஆண்டு பிறந்த என் தந்தைக்கு திராவிடமணி என பெயர்சூட்டி திராவிட இயக்கத்தின் மீது தனக்குள்ள பற்றினை வெளிப்படுத்தினார். எனது பாட்டானர் கடந்த 2001 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞரின் கைதினை கண்டித்தும், மெரினா கடற்கரையில் இருந்த கண்ணகி சிலையை அகற்றியதை கண்டித்தும் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை மெரினா சீரணி அரங்கில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் குண்டர்களால் தாக்கப்பட்டு சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதை அறிந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நேரில் சந்தித்து தன் தோளில் சாய்த்துக் கொண்டு ஆறுதல் தெரிவித்தார். அது மட்டுமின்றி ஒரு சாதாரண தொண்டனின் வலி அறிந்து முரசொலியில் "துயரத்தில் ஒரு துளி தேன்" என்று கடிதம் எழுதிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி,

கல்லூரி பயிலும் மாணவிகளுக்காக புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், கலைஞர் மகளிர் விடியல் பயணம், பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், வெளி நாடுகளில் சென்று படிக்கும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கான அம்பேத்கர் அயலக கல்வித் திட்டம், முதியோர், மாற்றுத் திறனாளி களின் இல்லத்திற்கே சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டம், 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது, தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலமாக உருவாக்கியது, பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே இரண்டாவது பெரிய மாநிலமாக நிலை நிறுத்தியது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கி நல்லாட்சி தந்த திராவிட மாடல் நாயகர் ஏழை எளிய மக்களின் நெஞ்சத்திலே அப்பாவாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் உள்ள சிறிய கிராமமான கீழ்கூத்தப்பாக்கத்தைச் சேர்ந்த எளியவனாகிய என்னை கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சி தேர்தலில் மாவட்ட குழு உறுப்பினராக வாய்ப்பளித்து பின்னர் இந்த சட்டமன்ற தேர்தலிலும் வானூர் சட்டமன்ற தொகுதியில் வேட்பாளராக வாய்ப்பளித்து கடந்த 25 ஆண்டு காலத்திற்கு பிறகு மீண்டும் திராவிட முன்னேற்ற கழகத்தின் கோட்டையாக மாற்றிக் காட்டிய எங்கள் கழகத் தலைவர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி அவர்களை வணங்கி,

முன்னாள் துணை முதல்வர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் எண்ணற்ற இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவித்து தேசிய மற்றும் சர்வதேச அளவில் வெற்றி பெற்ற 100க்கு மேற்பட்ட விளையாட்டு வீரர், வீராங்கனைகளை அரசு ஊழியராக நியமித்து இளைஞர்களின் வழிகாட்டியாய் விளங்கிய, இளைஞர்களின் எழுச்சி நாயகர், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்கி, எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த முன்னாள் அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களுக்கும், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் எங்கள் குடும்பத் தலைவர் டாக்டர். இரா. இலட்சுமணன் அவர்களுக்கும், கழகத்தின் வெற்றிக்காக அயராது உழைத்த வானூர் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட மாநில அணி நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், தோழமை கட்சியைச் சேர்ந்த தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், விவசாயத்தை பின்னணியாக கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த எளியவனான என்னை வானூர் தொகுதி மக்களின் குரலாகவும், அவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்பவனாகவும், என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து வெற்றி பெறச் செய்த வானூர் தொகுதி மக்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த எதிர்க் கட்சி தலைவருக்கும், எதிர்க் கட்சி துணைத் தலைவருக்கும், கொறடா, துணை கொறடா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் 1 இலட்சம் எக்கரில் சவுக்கு சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக வானூர் சட்டமன்ற தொகுதியில் மட்டும் சுமார் 60 ஆயிரம் எக்கர் பரப்பளவில் சவுக்கு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்தாண்டு பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட சவுக்கை விவசாயிகளுக்கு வரலாற்றிலேயே முதன் முறையாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் ஹெக்டர் ஒன்றுக்கு இழப்பீடாக ரூ.20 ஆயிரம் வழங்கப்பட்டது. விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL)-ஐ வானூர் தொகுதியில் தொடங்கினால் சவுக்கை பயிரிடும் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் மற்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

வானூர் சட்டமன்ற தொகுதி திருச்சிற்றம்பலம் கூட்டுரோட்டில் வானூர் அரசு கலை அறிவியல் கல்லூரி உள்ளது. இதில் தற்போது இளங்கலை பட்டப் படிப்புகள் இயங்கி வருகிறது. கூடுதலாக மாணவர்கள் பயன் பெறும் வகையில் முதுகலை பட்டப் படிப்பும் தொடங்கிட வேண்டும் என்று பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் வானூர் சட்டமன்ற தொகுதியில் அரசு பாலிடெக்னிக் கல்லூரியும், அரசு செவிலியர் (நர்சிங்) கல்லூரியும் தொடங்கிட பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் சட்டமன்ற இராம்பாக்கம் அரசு மேல்நிலை பள்ளியில் 1000-க்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். மாணவர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு தங்கும் விடுதி ஏற்படுத்தித் தர வேண்டுமாறு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் சட்டமன்ற தொகுதி சித்தலம்பட்டு கிராமத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று உருவாக்கித் தந்திட வேண்டும். மேலும் வானூர் தொகுதியில் சமூக நீதி பள்ளிகள் அதிகளவில் இயங்கி வருகிறது. இந்த பள்ளிகளை புனரமைப்பு செய்து, கூடுதலாக வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், கழிப்பிட வசதி மற்றும் சுற்று மதில் சுவர் (Compound Wall) அமைத்திட பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள இளைஞர்களை விளையாட்டில் ஊக்குவிக்கும் வகையிலும், போதை பழக்கத்திற்கு செல்லாத வகையிலும் வானூர் தொகுதியில் ஒரு விளையாட்டு மைதானம் அமைத்திட பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் தொகுதியில் உள்ள கோட்டக்குப்பம் நகராட்சியில் சுமார் 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதியில் தினமும் ஆயிரக் கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். மேலும் இந்த பகுதியில் நூற்றுக்கணக்கான தொழில் நிறுவனங்களும், வணிக நிறுவனங்களும், தங்கும் விடுதிகளும் இயங்கி வருகிறது. இந்த பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான துணை மின் நிலையம் ஒன்று அமைத்திட பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் வானூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள உலக புகழ்பெற்ற கல்மர பூங்கா மற்றும் திருவக்கரை வக்கிரகாளியம்மன் கோவில் உள்ளது. இந்த பகுதியை சுற்றிலும் பல்வேறு தொழில் நிறுவனங்கள் உள்ளது. இந்த பகுதியில் உள்ள துணை மின் நிலையத்தினை 110 கே.வி துணை மின் நிலையமாக தரம் உயர்த்தித் தருமாறு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். திருச்சிற்றம்பலம் கூட்டுரோட்டில் மாநிலத்தில் முதல் முறையாக முன்னாள் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களால் நியோ டைடில் பார்க் தொடங்கப்பட்டு அதில் தற்போது 500-க்கு மேற்பட்ட இளைஞர்கள் பணி பரிந்து வருகின்றனர். இந்த திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு அதனை சுற்றியுள்ள பெண்கள், கர்பினித் தாய்மார்கள், குழந்தைகள் பயன்பெறும் வகையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித் தர பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் தொகுதிக்குட்பட்ட புளிச்சப்பள்ளம் வருவாய் கிராமத்தைச் சேர்ந்த பாப்பாஞ்சாவடி புதூர், இரும்பை வருவாய் கிராமத்தில் சுமார் 300-க்கு மேற்பட்ட குடும்பங்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு மனை பட்டா இல்லாமல் வசித்து வருகின்றனர். இதனால் இந்த மக்கள் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே இந்த பகுதியில் வாழும் குடும்பங்களுக்கு போர்க் கால அடிப்படையில் அரசு மூலம் இலவச வீட்டு மனை பட்டா வழங்கிட பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

**விருந்தினர் ஆய்வு மாளிகை!**

வானூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள



இரும்பை கிராமத்தில் சர்வதேச நகராமன ஆரோவில் நகரம் உள்ளது. மேலும் அதன் அருகில் பொம்மையார்பாளையம், கோட்டக் குப்பம் பகுதிகள் அழகிய கடற்கரை பகுதிகள் ஆகும். இந்த பகுதிகளில் நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் மிக முக்கியமான சுற்றுலா பகுதியாக விளங்கி வருகின்றது. எனவே இந்த பகுதியில் அரசு அலுவலர்கள் ஆய்வு பணிக்காக வந்து செல்வதற்கு விருந்தினர் ஆய்வு மாளிகை பொதுப் பணி துறை வாயிலாக அமைத்திட பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை இடைத் தரகர்கள் யாருமின்றி நேரடியாக சந்தையில் விற்பனை செய்ய உழவர் சந்தை என்ற சிறப்பான திட்டத்தினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்.

வானூர் சட்டமன்ற தொகுதியானது கிராமப்புறங்கள் நிறைந்த பகுதி ஆகும். இங்கு விவசாயம் முக்கியமான தொழிலாக விளங்குகிறது. விவசாயிகள் அதிகம் வாழும் வானூர் தொகுதியின் மையப் பகுதிகளான திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு, கிளியனூர், கண்டமங்கலம் பகுதிகளில் புதியதாக உழவர் சந்தைகள் அமைத்திட பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

**சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும்!**

வானூர் நீதிமன்றம் கடந்த 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி முதல் சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்றமாக செயல்பட்டு வந்தது. தற்பொழுது சிவில் நீதிமன்றம் தனியாகவும், கிரிமினல் நீதிமன்றம் தனியாகவும் செயல்பட்டு வருகின்றது. பொது மக்கள் 30 கி.மீ தொலைவில் உள்ள திண்டிவனம் சார்பு நீதிமன்றம் செல்ல வேண்டி உள்ளது. இதனால் வழக்காடிகள் மற்றும் வழக்கறிஞர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே பொது மக்களின் சிரமத்தை போக்கிடும் வகையில் வானூரில் சார்பு நீதிமன்றம் அமைக்கவும் அதற்குண்டான நிதி ஒதுக்கிடவும் பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் தொகுதிக்குட்பட்ட கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 46 ஊராட்சிகள் விழுப்புரம் மற்றும் விக்கிரவாண்டி தாலுகாவில் உள்ளது. இதனால் பொது மக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே கண்டமங்கலத்தை தலைமையாகக் கொண்டு தனி தாலுக்கா அமைக்க (வருவாய் வட்டம்) பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெண்ணை ஆற்றிலிருந்து குட்டியாங்குப்பம் வாய்க்காலில் தண்ணீர் வர இராம்பாக்கத்தில் தடுப்பணை கட்டித் தர வேண்டுமாறு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

சொர்ணாவூர் அணைக் கட்டு உடைந்துள்ளது. அதனை சரி செய்து தருமாறு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் தொகுதி பெரிய பாபு சமுத்திரம் வழியாக செல்லும் பம்பை ஆற்றில் தடுப்பணை கட்டித் தர பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

**சாலை அமைத்துத் தாரீர்!**

வானூர் தொகுதி பள்ளி நேளியலூர் முதல் கடலூர் செல்லும் சாலையை இரு வழி சாலையாக தரம் உயர்த்தித் தர பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

கண்டமங்கலத்தில் இருந்து நவமால் மருதூர் வழியாக கடலூர் சாலையை இணைக்கும் சாலையாக தரம் உயர்த்தித் தருவதற்கு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

திருவக்கரை முதல் திருமங்கலம் செல்லும் சாலையினை இருவழி சாலையாக தரம் உயர்த்தித் தருவதற்கு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

பிரம்மதேசம் முதல் ரங்கநாதபுரம் செல்லும் சாலையை தரம் உயர்த்தித் தருமாறும், கிளாபாக்கம் முதல் மயிலம் வரை செல்லும் சாலையை தரம் உயர்த்தித் தருமாறும், கீழ்புத்துப்பட்டிலிருந்து ஒழிந்தியாம்பட்டு செல்லும் சாலையை தரம் உயர்த்தித் தருமாறும் பேரவை தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

வானூர் தொகுதிக்குட்பட்ட கிழக்கு கடற்கரை சாலையில் கடந்த திராவிட மாடல் ஆட்சியில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் தமிழுக்கு அமுதென்று பாடிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பாக ரூ.3.50 கோடி செலவில் மணி மண்டபம் கட்டுமான பணி தொடங்கப்பட்டது. புரட்சிக் கவிஞரின் மணி மண்டபத்தை விரைந்து முடித்திட பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

விழுப்புரம் மாவட்டத்திற்கு விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதி (Sports Youth Hostel) ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

**கடன் தள்ளுபடி எப்போது!**

ஆதி திராவிட மக்கள் மற்றும் என்னைப் போன்ற இளைஞர்கள் தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேற முன்னாள் முதலமைச்சர் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது தாட்கோ நிறுவனம். தாட்கோ மூலம் தொழில் தொடங்க வழங்கப்பட்ட கடன் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று தங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தீர்கள். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையில் தாட்கோ கடன் தள்ளுபடி குறித்த எந்த அறிவிப்பும் இல்லை. தாட்கோ கடன்கள் எப்பொழுது தள்ளுபடி செய்யப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

முதல்வர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் நடந்த தேர்தல் பரப்புரையில் இரண்டு ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகள் மற்றும் நிலமற்ற குடும்பத்தினர் மற்றும் ஒன்றிய, மாநில அரசு ஊழியர் இல்லாத குடும்பத்தில் உள்ள மாணவர்களின் பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழிற்கல்வி முதல் அனைத்து படிப்புகளுக்கான முழு செலவையும் அரசே ஏற்கும் என்று அறிவித்தார். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையில் அது பற்றிய எந்த ஒரு அறிவிப்பும் இல்லை. இந்த திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

வானூர் தொகுதி பெரும்பாலும் புதுச்சேரி மாநிலத்தையொட்டி உள்ள பகுதி ஆகும். எனது சட்டமன்றத் திற்குட்பட்ட பெரும்பாலான கருவுற்ற தாய்மார்கள் மகப்பேறு அவசர காலத்தில் புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவமனை மற்றும் அரசு மகப்பேறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு குழந்தைகள் பிறக்கின்றது. முதல்வர் அவர்கள் அறிவித்த தாய்மாமன் தங்க மோதிர திட்டத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த புதுச்சேரியில் பிறக்கும் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு தொழில்மயமான ஒரு மாநிலம். சரிபாதிக்கும் அதிகமான மக்கள் நகரங்களிலே வாழ்கிறார்கள். அதனால் சாலைகள் கட்டமைப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவை தமிழ்நாட்டிற்கு உள்ளது.

அந்தவகையில் எங்களுடைய கடந்த 5 ஆண்டுகளில் எங்களுடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் 692 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தடச் சாலைகள், 2,089 கி.மீ. நீளமுள்ள இரு வழித்தடச் சாலைகள் அமைத்துக்கொடுத்துள்ளார்.

ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 11,250 கி.மீ. சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1,057 பாலம் மற்றும் சிறு பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2,071 இடங்களில் சாலைப் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. 6,123.32 கி.மீ. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

கோயம்பேடு காளியம்மன் கோவில் தெரு சந்திப்பு மேம்பாலம், வேளச்சேரி விஜயநகர் சந்திப்பு மேம்பாலம், மேடவாக்கம் சாலை சந்திப்பு மேம்பாலம், மதுரை வளையச்சாலை சந்திப்பு மேம்பாலம், சென்னை இந்திரா நகர் & டைடல் பார்க் 'U' வடிவ மேம்பாலங்கள், கோயம்புத்தூர் உக்கடம்-ஆத்துப் பாலம் மேம்பாலப் பணிகள், கோயம்புத்தூர் அவிநாசி சாலை உயர்மட்டச் சாலை, மதுரை-தொப்பூர் சாலை அப்பல்லோ சந்திப்பு மேம்பாலம் என முக்கிய மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், கிண்டி கலைஞர் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை, மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம், கீழடி அருங்காட்சியகம், 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள், 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை (ITI) நவீனமயமாக்கல் என பொதுப்பணித்துறை சார்பில் எண்ணற்ற சாதனைத் திட்டங்களை தமிழ்நாட்டுக்கு தந்தவர் எங்களுடைய கழகத் தலைவர்.

அதேபோல, 15.11.2023 அன்று தமிழ்நாடு மாநிலத் துறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கை - 2023 வெளியிடப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் முதல் இலங்கை காங்கேசன்துறை வரையிலான படகுச் சேவை தொடக்கம், விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலையை இணைக்கும் கடல்சார் கண்ணாடிப் பாலம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இப்படி எண்ணற்ற சாதனைகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சிறு துறைமுகங்கள் சார்பாக எங்கள் ஆட்சிக்காலத்தில் திராவிட மாடல் முதலமைச்சர் செய்துள்ளார்.

நாங்கள் ஆட்சிக்கு வரும் போது முந்தைய அ.தி.மு.க. அரசு விட்டுச்சென்ற திட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செயல்படுத்தினார் எங்கள் தலைவர். ஆனால் இந்த புதிய அரசு அமைந்த பிறகு எங்கள் ஆட்சிக்கால திட்டங்களின் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன, தொய்வடைந்துவிட்டன என்றெல்லாம் செய்திகள் வருகின்றன.

**டெண்டரை ரத்து செய்துள்ள த.வெ.க. அரசு!**

குறிப்பாக, சென்னை - செய்யாறு தொழில்வழிச்சாலையை இணைக்கும் வகையில் 43 கிலோமீட்டருக்கு 4 வழிச்சாலை அமைப்பதற்காக கடந்த மார்ச் மாதம் கோரப்பட்ட டெண்டரை தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் ரத்து செய்துள்ளது.

அப்பகுதியில் சமீபக் காலமாக தொழில் வளர்ச்சி அதிகரித்து வருகிறது. சிப்காட் தொழிற்பேட்டையில் ஏராளமான தொழிற்சாலைகள் செயல்பட்டு வரும் நிலையில், சென்னை - செய்யாறு இடையேயான போக்குவரத்து வசதியை மேம்படுத்தி, கனரக வாகங்கள் செல்லும் வகையில் செய்யாறு சிப்காட் தொழில்வழிச்சாலையின் ஒரு பகுதியாக இத்திட்டம் அப்போது முன்மொழியப்பட்டது.

மீண்டும் 4 வழிச்சாலை பணிகளை இந்த அரசு தொடங்குமா.?இல்லை முழுமையாக கைவிடப்பட்டுள்ளதா?

அண்ணா சாலையில் சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரையிலான உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகளின் நிலை என்ன?

மதுரவாயல் - துறைமுகம் வரையிலான உயர் மட்ட பறக்கும் சாலை திட்டத்தின் நிலை என்ன?

இப்படி பல திட்டங்களின் நிலை குறித்து கேள்விகள் எழுகிறது.

நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் மேம்பாட்டுத்திட்டங்களுக்கான டெண்டர்களில், குறிப்பிட்ட சில பெரிய நிறுவனங்கள் (Corporate Contractors) மட்டுமே பங்கேற்கும் வகையில் Turnover Criteria மற்றும் அனுபவத் தகுதிகள் திடீரென மாற்றப்பட்டதாகப் புகார் எழுந்திருக்கிறது. எதற்காக இந்த புதிய விதிகள் புகுத்தப்பட்டன? இந்த விதிமுறை மாற்றங்களால் தமிழகத்தைச் சேர்ந்த சிறு மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரர்கள் டெண்டர் கோர முடியாமல் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இறுதி செய்யப்பட்ட 2,339 அரசு டெண்டர்களை தவெக அரசு ஒட்டுமொத்தமாக ரத்து செய்திருக்கிறது என ஊடகங்களில் செய்தி வெளியாகியிருக்கிறது. தவறுகள் நடந்திருந்தால் அரசு நடவடிக்கை எடுப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. பணிகள் முடிக்கப்பட்டு அது தரமில்லை எனில் பணத்தை நிறுத்தி வைக்க முடியும். பணிகளை தரத்தை அரசு சோதனை செய்ய முடியும். இப்படி வாய்ப்புகள் எல்லாம் இருந்தும் அதை செய்யாமல் டெண்டார்களை ரத்து செய்வதால் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள முடியாமல் அது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை இந்த உணர்ந்து இருக்கிறதா?

தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் நீண்ட கால நோக்கில் இவை பாதிப்பை ஏற்படுத்தும். எனவே முடக்கி வைக்கப்பட்டுள்ள திட்டங்களை மிக விரைவாக பணிகளை தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

எனக்கு வாய்ப்பளித்த சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு கழக உறுப்பினர் கௌதம் திராவிடமணி பேசினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கற்கோவில் இரா. இராமதாசு
### ஆகஸ்ட் 27 (2017)



**இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு நீடாமங்கலம் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**நீடாமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் – விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**